# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2048/32 - 2017 දෙසැම්බර් මස 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.12.07

*2048/32 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்**

***3 (4) ஆம் பிரிவின்கீழான அறிவித்தல்***

*திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க,செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 (4) ஆம் பிரிவின் நியதிகளின்படி எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வியாபாரம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரான மலிக் சமரவிக்ரம ஆகிய நான், இவ்வறிவித்தலின் மூலம்-*

*(1)* *அறுநூற்று ஆறு மில்லியன் ஐக்கியஅமெரிக்கநாடுகள் டொலரான (ஐஅநாடொ606மில்லியன்) எதிர்நோக்கப்பட்ட முதலீடொன்றுடன் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை (துறைமுகம்) மீளக்கட்டமைத்து, அபிவிருத்தி செய்து, வர்த்தக ரீதியில் ஒப்பேறக் கூடிய தேசியச் சொத்தாக ("கருத்திட்டம்") துறைமுகப் பாதுகாப்பு, பிரவேச சேவைகள், நங்கூரம் பாய்ச்சுமிடம், அவசர உதவிச் சேவை, ஆழப்படுத்தல், அகலப்படுத்தல், அவசர மீட்புச் சேவை (மூலதன மற்றும் பராமரிப்பு) மற்றும் மாசடைதல் கட்டுப்பாட்டுச் சேவை என்பன அடங்கலாக இருப்பினும், அவற்றுக்கு மாத்திரம் வரையறுக்கப்படாத அம்பாந்தோட்டை துறைமுகபொதுப் பாவனையாளர் வசதிகள் மற்றும் சேவைகள் முகாமைத்துவம் கருத்திட்டக் கம்பனியினால் கையேற்கப்படும். ("கருத்திட்டச் செயற்பாடு") மேலும் அபிவிருத்தி செய்து வர்த்தகமயமாக்குவதற்கும் கருத்திட்டமானது அர்ப்பணிப்புக் கொண்டுள்ளது. அத்துடன் இது, 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(2) ஆம் பிரிவின்படி 2017, நவம்பர் 6 ஆந் திகதிய 2044/20 ஆம் இலக்க அதிவிசேடவர்த்தமானியில் வெளியிடப்பட்டது;*

*(2)* *மேற்கூறப்பட்ட சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அறுநூற்று ஆறு மில்லியன் ஐக்கிய அமெரிக்க நாடுகள் டொலரான (ஐஅநாடொ606மில்லியன்) எதிர்நோக்கப்பட்ட முதலீடொன்றுடன் அம்பாந்தோட்டைத் துறைமுக (துறைமுகம்) அபிவிருத்தியை மீளக்கட்டமைப்பதற்கும் வர்த்தக ரீதியில் ஒப்பேறக்கூடிய தேசியச் சொத்தாக ("கருத்திட்டம்") உருமாற்றுவதற்கும் அதனைச் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக வெளிப்படுத்துவதற்கும் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதெனக் கூறுகின்றேன்;*


1A - G 26740 — 457 (2017/12)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(3) மேலேயுள்ள செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம், அம்பாந்தோட்டைத் துறைமுக (துறைமுகம்) அபிவிருத்தியை மீளக் கட்டமைப்பதற்கும் அதனை வர்த்தக ரீதியில் ஒப்பேறக்கூடிய தேசியச் சொத்தாகவிருப்பதற்கு உருமாற்றுவதற்குமான கருத்திட்டமென அழைக்கப்பட்டு அறியப்படுதல் வேண்டுமென்றும் இக்கருத்திட்டத்தைப் பொறுப்பேற்பதற்கான கருத்திட்டக் கம்பெனி M/S அம்பாந்தோட்டை இன்டர்நஷனல் போர்ட் சேர்விஸ் கம்பனி(பிறைவேட்) லிமிற்றெற் (கருத்திட்டக் "கம்பெனி") என்பதாகவுள்ளதென்றும் குறித்துரைக்கின்றேன்;

(4) கருத்திட்டக் கம்பெனியானது,செயல்நுணுக்கஅபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 (5) ஆம் பிரிவின் நியதிகளின்படி பாராளுமன்றத் தீர்மானத்தின்மூலமான அங்கீகாரத்தின் மேல் ஏழு (7)ஆண்டுகளினுள் வர்த்தகத் தொழிற்பாடுகளை அமுலாக்குதலும் தொடங்குதலும் வேண்டுமெனக் குறித்துரைக்கின்றேன்;

(5) மேற்கூறப்பட்ட கருத்திட்டத்தின் நோக்கங்களுக்காக, திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் நியதிகளின்படி, இவ்வறிவித்தலில் தரப்பட்டுள்ள விலக்களிப்புகள் கருத்திட்டக் கம்பெனிக்கு ஏற்புடையனவாதல் வேண்டுமெனக் குறித்துரைக்கின்றேன்.

## 1 ஆம் அட்டவணை

(1) **2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கஉள்நாட்டுஇறைவரிச் சட்டம்**

**(i) கூட்டிணைவுவருமானவரி**

கருத்திட்டத்தின் செயற்பாடுகள் மூலம் உழைக்கப்படுகின்ற இலாபம், உழைப்பு மற்றும் வருமானத்தின் மீது விதிக்கப்படுகின்ற வருமானவரி தொடர்பான 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகள் இருபத்தைந்து (25) வருடகாலமொன்றுக்கு (வரிவிடுவிப்புக் காலப்பகுதி) கருத்திட்டக் கம்பனிக்கு ஏற்புடையதன்று.

இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம், சீனமேசன்ட் போர்ட் ஹோல்டிங் கம்பனிலிமிடட், அம்பாந்தோட்டை இன்டர்நெசனல் போர்ட் குறுாப(பிரைவெட்) லிமிடட் மற்றும் கருத்திட்ட கம்பனி என்பவற்றுக்கிடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆந் திகதிய அனுசரனை ஒப்பந்தம் (அனுசரனை ஒப்பந்தம்) செயல்வலுப் பெறும் திகதியிலிருந்து ஏழு (07) வருட காலத்தில் இந்த வரிவிடுதலைக் காலப்பகுதி ஆரம்பமாகுதல் வேண்டும்.

இருப்பினும், இந்த வரிவிடுதலைக் காலப்பகுதி நிறைவடைந்த பின்னர், அக்காலப் பகுதியில் செயல்வலுவில் உள்ள உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கருத்திட்டக் கம்பனி இலாபம், உழைப்பு மற்றும் வருமானம் என்பனவற்றுக்காக உரிய வருமான வரியைச் செலுத்துதல் வேண்டும்.

எவ்வாறாயினும், அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டத்திற்காக முதலீட்டு அடிப்படையில் பிரவேசிக்கும் போதுகருத்திட்டக் கம்பனிபங்குப் பரிவர்த்தனை அல்லதுசொத்துப் பரிமாற்றம் தொடர்பில் கூட்டிணைவு வருமான வரிசெலுத்துவதிலிருந்துவிடுவிக்கப்படல் வேண்டும்.

இருப்பினும், இந்த வரிவிடுதலைக் காலப்பகுதியினுள் கருத்திட்டத்தின் மொத்தசெயற்பாட்டு வருமானத்தில் 0.05% விகிதாசாரத்தில் பொருளாதார சேவைக் கட்டடணம் ஏற்புடையதாகும்.

**(ii) பங்கிலாபம் மீதானவரி**

வரிவிடுதலை இலாபத்திலிருந்து, உழைப்பிலிருந்துபங்குதாரர்களுக்குகொடுப்பனவு செய்யப்படுகின்ற பங்கிலாபம் அனுசரனை ஒப்பந்தம் செயல்வலுப்பெறும் திகதி தொடக்கம் இருபத்தைந்து (25) வருட வரிவிடுதலைக் காலப்பகுதியினுள் மற்றும் அதுநிறைவடைந்த பின்னர் ஒருவருட காலப்பகுதியினுள் வருமானவரியிலிருந்துவிடுவிக்கப்படல் வேண்டும்.

**(iii) நிறுத்திவைத்தல் வரி**

பாராளுமன்றத்தில் முன்மொழிவுநிறைவேற்றப்பட்டபின்னர் ஆரம்பமாகும் எதிர்வரும் ஏழு (07) வருடகாலப்பகுதியினுள் கீழேகாட்டப்பட்டுள்ள கட்டணங்களின் மீதுநிறுத்திவைத்தல் வரிசெலுத்துவதிலிருந்து செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(5) ஆம் பிரிவின் நியதிகளின் படி கருத்திட்டக் கம்பனி விடுவிக்கப்படல் வேண்டும்.

(அ) முகாமைத்துவக் கட்டணம்,வேத்துரிமைக் கட்டணம், இருப்பினும் அவ்வாறான கட்டணங்களின் மொத்தக் கூட்டுத் தொகைத் மொத்தசெயற்பாட்டு வருமானத்தில் நூற்றுக்கு மூன்றை (3%) மேற்படாதிருத்தல் வேண்டும்.

(ஆ) சந்தைப்படுத்தல் கட்டணம், இருப்பினும் அவ்வாறான கட்டணங்களின் மொத்தக் கூட்டுத் தொகைமொத்த செயற்பாட்டு வருமானத்தில் நூற்றுக்குஒன்றுதசம் ஐந்தை (1.5%) மேற்படாதிருத்தல் வேண்டும்.

(இ) ஊக்குவிப்புப் படி முகாமைத்துவக் கட்டணம், இருப்பினும் அவ்வாறானகட்டணங்களின் மொத்தக் கூட்டுத் தொகை மொத்த செயற்பாட்டு இலாபத்தில் நூற்றுக்கு மூன்றை (3%) மேற்படாதிருத்தல் வேண்டும்.
இருப்பினும், கருத்திட்ட கம்பனி, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(5) ஆம் பிரிவின் நியதிகளின் படி பாராளுமன்றத்தில் முன்மொழிவுநிறைவேற்றப்பட்டபின்னர் ஆரம்பமாகும் எதிர்வரும் இருபத்தைந்து (25)வருட காலப்பகுதியினுள் மூலதனச் செலவுகளுக்காக பெறப்பட்ட வெளிநாட்டு கடன் வட்டிக்காக மற்றும் மதியுரைஞர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படுகின்ற தொழிநுட்பக் கட்டணம் அல்லதுசேவைக் கட்டணத்திற்காகநிறுத்திவைத்தல் வரிசெலுத்துவதிலிருந்துகருத்திட்டக் கம்பனிவிடுவிக்கப்படல் வேண்டும்.

**(iv) உழைக்கும் போதுசெலுத்தும் வரி**

கருத்திட்ட கம்பனியின் பணியாட்டொகுதியினர் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(5) ஆம் பிரிவின் நியதிகளின் படி பாராளுமன்றத்தில் முன்மொழிவு நிறைவேற்றப்பட்ட பின்னர் ஆரம்பமாகும் எதிர்வரும் ஏழு (07) வருடகாலப் பகுதியினுள் கருத்திட்டக் கம்பனியின் வெளிநாட்டு ஊழியர்கள் உழைக்கின்றபோது செலுத்தும் வரியிலிருந்து விடுவிக்கப்படல் வேண்டுமென்பதோடு எல்லா சந்தர்ப்பங்களிலும் அந்த ஊழியர்களின் எண்ணிக்கை மூன்று (03) உயர்ந்த பட்சத்திற்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

***(2) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கப் பெறுமதிசேர் வரிச் சட்டம்***

இலங்கை முதலீட்டுச் சபையால் அனுமதிக்கப்படுகின்றவாறு கருத்திட்டம் சார்ந்த பண்டங்களின் இறக்குமதி மற்றும் உள்நாட்டுக் கொள்வனவு மற்றும் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான சேவைகளுக்காக செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(5) ஆம் பிரிவின் நியதிகளின் படி பாராளுமன்றத்தில் முன்மொழிவு நிறைவேற்றப்பட்ட பின்னர் ஆரம்பமாகும் எதிர்வரும் ஏழு (07) வருடகாலப்பகுதியினுள் பெறுமதிசேர் வரிசெலுத்துவதிலிருந்து விடுவிக்கப்படல் வேண்டும்.உள்நாட்டுக் கொள்வனவுகள் மற்றும் இறக்குமதிகள் என்பவற்றுக்குரிய வரிவிடுவிப்பு கருத்திட்டத்தின் பணிகளுக்காக கருத்திட்டக் கம்பனியின் ஒப்பந்தக்காரருக்கு அல்லதுதுணை ஒப்பந்தக்காரருக்கும் ஏற்புடையதாகவிருத்தல் வேண்டும்.

இருப்பினும், அம்பாந்தோட்டைதுறைமுக அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கானமுதலீட்டாளராக பிரவேசிக்கும்போது கருத்திட்டக் கம்பனியின் பங்குப் பரிவர்த்தனை அல்லதுசொத்துப் பரிமாற்றம் தொடர்பில் பெறுமதிசேர் வரிசெலுத்துவதிலிருந்து விடுவிக்கப்படல் வேண்டும்

***(3) 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்கதுறைமுகங்கள் மற்றும் விமானநிலையங்கள் மேம்பாட்டுவரிச் சட்டம்***

இலங்கை முதலீட்டுச் சபையால் அனுமதிக்கப்படுகின்றவாறு செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(5) ஆம் பிரிவின் நியதிகளின் படி பாராளுமன்றத்தில் முன்மொழிவு நிறைவேற்றப்பட்டபின்னர் ஆரம்பமாகும் எதிர்வரும் ஏழு (07) வருடகாலப்பகுதியினுள் இறக்குமதி செய்யப்படுகின்ற கருத்திட்டம் சார்ந்த பண்டங்களுக்காக துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் மேம்பாட்டு வரிசெலுத்துவதிலிருந்துகருத்திட்டக் கம்பனி விடுவிக்கப்படல் வேண்டும். கருத்திட்டக் கம்பனியால் கருத்திட்டத்திற்காக செய்யப்படுகின்ற நேரடியான இறக்குமதி அல்லது கருத்திட்டத்தின் பணிகளுக்காக ஒப்பந்தக்காரரொருவர் அல்லது துணை ஒப்பந்தக்காரரொருவர் செய்கின்ற இறக்குமதிகளுக்காகவும் இந்த வரிவிடுவிப்பு இங்கு கீழே காட்டப்பட்டுள்ள (7) ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக ஏற்புடையதாகும்.

***(4) 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்***

செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(5) ஆம் பிரிவின் நியதிகளின் படி பாராளுமன்றத்தில் முன்மொழிவுநிறைவேற்றப்பட்ட பின்னர் ஆரம்பமாகும் எதிர்வரும் ஏழு (07) வருடகாலப்பகுதியினுள் இலங்கையில் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்படுகின்ற வாகனங்கள் தவிர்ந்த இலங்கை முதலீட்டுச் சபையால் அனுமதிக்கப்படுகின்றவாறு கருத்திட்டம் சார்ந்தபண்டங்களின் இறக்குமதி உற்பத்தி வரிசெலுத்துவதிலிருந்து விடுவிக்கப்படல் வேண்டும். இந்த வரிவிடுவிப்பு கருத்திட்டத்தின் பணிகளுக்காக கருத்திட்டக் கம்பனியின் ஒப்பந்தக்காரரொருவருக்கு அல்லது துணை ஒப்பந்தக்காரரொருவருக்கும் ஏற்புடையதாகவிருத்தல் வேண்டும்.

**(5) 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்**

*செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(5) ஆம் பிரிவின் நியதிகளின் படி பாராளுமன்றத்தில் முன்மொழிவு நிறைவேற்றப்பட்ட பின்னர் ஆரம்பமாகும் எதிர்வரும் ஏழு (07) வருட காலப்பகுதியினுள் இலங்கை முதலீட்டுச் சபையால் அனுமதிக்கப்படுகின்ற கருத்திட்டம் சார்ந்த பண்டங்களின் இறக்குமதி செஸ் வரிசெலுத்துவதிலிருந்து விடுவிக்கப்படல் வேண்டும். இந்த வரிவிடுவிப்பு கருத்திட்டத்தின் பணிகளுக்காக கருத்திட்டக் கம்பனியின் ஒப்பந்தக்காரரொருவருக்கு அல்லது துணை ஒப்பந்தக்காரரொருவருக்கும் ஏற்புடையதாகவிருத்தல் வேண்டும்.*

**(6) தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி**

*செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(5) ஆம் பிரிவின் நியதிகளின் படி பாராளுமன்றத்தில் முன்மொழிவுநிறைவேற்றப்பட்டபின்னர் ஆரம்பமாகும் எதிர்வரும் ஏழு (07) வருடகாலப்பகுதியினுள் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிசெலுத்துவதிலிருந்துகருத்திட்டக் கம்பனி,ஒப்பந்தக்காரர்கள் அல்லதுதுணைஒப்பந்தக்காரர்கள் விடுவிக்கப்படல் வேண்டும்.*

*இருப்பினும், அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கான முதலீட்டாளராக பிரவேசிக்கும்போது கருத்திட்டக் கம்பனியின் பங்குப் பரிவர்த்தனைஅல்லதுசொத்துப் பரிமாற்றம் தொடர்பில் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிசெலுத்து வதிலிருந்துவிடுவிக்கப்படல் வேண்டும்*

**(7) கருத்திட்டம் சார்ந்தபொருட்கள் இறக்குமதிக்கானசுங்கவரி (235 ஆம் அத்தியாயம் - சுங்கவரிக் கட்டளைச் சட்டம்)**

*செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(5) ஆம் பிரிவின் நியதிகளின் படி பாராளுமன்றத்தில் முன்மொழிவு நிறைவேற்றப்பட்ட பின்னர் ஆரம்பமாகும் எதிர்வரும் ஏழு (07) வருட காலப்பகுதியினுள் இலங்கையில் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்படுகின்ற வாகனங்கள் தவிர்ந்த இலங்கைமுதலீட்டுச் சபையால் அனுமதிக்கப்படுகின்றவாறு கருத்திட்டத்திற்காக கருத்திட்டம் சார்ந்த பண்டங்களின் இறக்குமதிகள் அனைத்தும் சுங்கவரி செலுத்துவதிலிருந்து விடுவிக்கப்படல் வேண்டும். இந்த சுங்கவரி செலுத்துவதிலிருந்து விடுவிப்புபாராளுமன்றத்தில் முன்மொழிவுநிறைவேற்றப்பட்டபின்னர் ஆரம்பமாகும் எதிர்வரும் ஏழு (07) வருடகாலப்பகுதியினுள் இலங்கைமுதலீட்டுச் சபையால் அனுமதிக்கப்படுகின்றவாறுகருத்திட்டக் கம்பனியினால் நேரடியாகச் செய்யப்படுகின்ற இறக்குமதிகள் அல்லதுஒப்பந்தக்காரரொருவர் அல்லது துணை ஒப்பந்தக்காரரொருவரால் பெற்றுக் கொள்ளப்படுகின்ற அனைத்துப் பண்டங்களுக்கும் ஏற்புடையதாகவிருத்தல் வேண்டும். எதிர் மறைப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளபண்டங்கள் அனைத்தும் சுங்கவரி விதிப்பிலிருந்து விடுவிக்கப்படல் வேண்டும். இருப்பினும், அவ்வாறானபண்டங்கள் இலங்கையினுள் முழுமையாக உற்பத்தி செய்யப்படாத அல்லது கருத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்காக போதுமானஅளவில், தரத்தில் மற்றும் காலப்பகுதியினுள் பெற்றுக்கொள்ள முடியாதவையாக இருத்தல் வேண்டும்.*

**மலிக் சமரவிக்ரம, பாஉ**
அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வியாபார அமைச்சர்

*2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 07ஆந் நாளாகிய இன்று.*

*12-653*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.